புனே என்.எல்.சி. மாநாட்டில் தமிழக முதல்வரின் ‘திராவிட மாடல்’ திட்டங்களுக்குப் பெரும் பாராட்டு, அங்கீகாரம்!

# எதிர்தரப்பையும் வெற்றிகொண்ட திராவிட மாடலின் வல்லமை!

“திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களும் சாதனைகளும் இந்தியாவுக்கே வழிகாட்டுகின்றன” என்று புனேயில் நடந்த என்.எல்.சி. (NLC) கருத்தரங்கில் கலந்துகொண்ட ஆய்வு மாணவர்களும், பிற மாநில சட்டமன்றம், சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும் பெருமைப்படுத்தினார்கள். இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டமைக்கு கழகத் தலைவரும் தமிழ்நாட்டு முதல் அமைச்சருமான தளபதியிடம் வாழ்த்துப் பெற்றதைப் பெரும் மகிழ்ச்சிக்குரியதாகக் கருதுகிறேன்.

மகாராஷ்டிரா மாநிலம், புனே நகரை மையமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ‘’தேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் மாநாடு” (National Legislators’ Conference - NLC) எனும் அமைப்பின் சார்பில் ”Capacity Building Programme” என்றொரு கருத்தரங்க நிகழ்வு புனே, எம்.ஐ.டி. பல்கலைக்கழக வளாகத்தில் (M.I.T. World Peace University, Pune) பிப்ரவரி 8, 9 ஆகிய இரு தினங்கள் நடைபெற்றது.

இந்தியாவின் அனைத்து மாநிலச் சட்டமன்றம், சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற சபாநாயகர்கள் என சுமார் 180 பேர் இந்த மாநாட்டில் பங்கேற்றனர். மகாராஷ்டிர மாநில முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் உரையுடன் தொடங்கிய இக்கருத்தரங்க மாநாட்டில் தமிழ்நாட்டிலிருந்து தி.மு.க. சார்பில் நானும், மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும் கலந்துகொண்டோம்.

இந்த மாநாட்டில் அனைத்து மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களிடையே கலந்துரையாடல் நடைபெற்றது. அப்போது மத்தியப்பிரதேச பா.ஜ.க.வின் எம்.எல்.ஏ. ஒருவர், **“எங்களுடைய வழக்கமான தேர்தல் உத்தியை மாற்றி, கடந்த தேர்தலில் ‘திராவிட மாடல்’ தேர்தல் வாக்குறுதிகளைத்தான் பின்பற்றினோம். தமிழகத்தில் மகளிர் உரிமைத் திட்டத்தை உங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றி வருவதை ஆய்வு செய்து, அதே வாக்குறுதியைக் கொடுத்தோம். ஆட்சிக்கு வந்தால் மாதம் 3,000 ரூபாய் கொடுப்போம் என்ற வாக்குறுதியால் தான் வெற்றி பெற்றோம். முதல் கட்டமாக, இப்போது மாதம் 1,250 ரூபாயை மகளிர் வங்கிக் கணக்கில் வரவு வைத்து வருகிறோம். தமிழக அரசு நடைமுறைப்படுத்திவரும் மற்ற பிற மகளிர் மற்றும் மாணவர் நலத் திட்டங்களையும் ஆய்வு செய்து, அவற்றில் முக்கியமான சில திட்டங்களை அடுத்து நடைமுறைப்படுத்த இருக்கிறோம்”**



என்று மனம் திறந்து பாராட்டினார். மாற்றுக் கட்சியினரும் மனம் திறந்து பாராட்டும் அளவுக்கு திராவிட மாடல் அரசு செயல்படுவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

எம்.ஐ.டி. பல்கலைக்கழகத்தில் பயிலும் அரசியல் விஞ்ஞான புலப் பிரிவு (Political Science) மாணவர்களுடன் சட்டமன்ற உறுப்பினர்களின் கலந்துரையாடல் நடந்தது. அப்போது அம்மாணவர்கள், “குடிசைவாழ் மக்களுக்கு அரசுகள் போதுமான திட்டங்களை உருவாக்க வேண்டும்” என்று கோரிக்கை வைத்தனர்.

**இ.பரந்தாமன்,**
கழகச் சட்டத்துறை
இணைச் செயலாளர்
எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர்

**உடனே நான் அவர்களிடம், “தமிழகத்திற்கு வந்து பாருங்கள். 40 ஆண்டுகளுக்கு முன்னரே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குடிசைப் பகுதி மக்களுக்காகவே தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் என்றொரு அரசு நிர்வாக அமைப்பினை உருவாக்கியும் குடிசைவாழ் மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டங்களைத் தீட்டியும் அவர்களை அடுக்குமாடி வீடுகளில் குடியமர்த்தினார்.**

**இப்போது சமூக நீதித் தலைவர், எங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில், திட்டத்தின் பெயரில் கூட குடிசை இருக்கக்கூடாது என்பதற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்** (Tamil Nadu Urban Habitat Development Board) **என்று பெயர் மாற்றம் செய்து, பழமையான குடியிருப்புகளை இடித்துப் புதிதாகக் கட்டிக்கொடுத்து வருகிறார்.**

**தமிழகத்தில் குடிசைகள் இல்லை என்ற நிலையை உருவாக்கிட எங்கள் தலைவர் ஸ்டாலின் அவர்கள், ‘’கலைஞர் கனவு இல்லம்” என்ற திட்டம் மூலம் ஆயிரக்கணக்கான புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை கட்டிக் கொடுத்து வருகிறார். சென்னை மாநகரத்தில் ஏழை மக்களுக்காகக் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் 400 சதுர அடி கொண்ட வீடொன்றைக் கட்டுவதற்கு 15 முதல் 18 இலட்சம் ரூபாய் வரை செலவாகிறது. இதில் ஒன்றிய அரசின் பங்கு ரூபாய் 1.5 இலட்சம்; பயனாளிகளின் பங்கு ரூபாய் 1.5 இலட்சம்; மீதமுள்ள தொகை முழுமையும் தமிழ்நாடு அரசே செலுத்துகிறது. அதோடு, சுகாதாரமான சுற்றுச்சூழல், சுத்தமான குடிநீர், லிஃப்ட் எனத் தனியார் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் கிடைக்கும் அத்தனை வசதிகளையும் செய்து கொடுத்து வருகிறார்”** என்று புள்ளிவிவரங்களுடன் எடுத்துக் கூறியதும் அம்மாணவர்கள் ஆச்சரியம் அடைந்தனர்.

நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற மாணவர்களின் கல்வி இடைவெளி குறித்து மாணவர்கள் கேள்வி எழுப்பினார்கள். அதற்கு, **“கல்வியில் எங்கள் தமிழ்நாடு இந்தியாவுக்கே முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்கிறது. 1 கிலோ மீட்டருக்கு ஓர் ஆரம்பப் பள்ளி, 3 கிலோமீட்டருக்கு ஒரு நடுநிலைப் பள்ளி, 5 கிலோமீட்டருக்கு ஓர் உயர்நிலைப் பள்ளி, 8 கிலோமீட்டருக்கு ஒரு மேல்நிலைப் பள்ளி என்ற கொள்கையை 30 ஆண்டுகளுக்கு முன்பே தீட்டி நடைமுறைப்படுத்தியவர் முத்தமிழறிஞர் எங்கள் கலைஞர். பெற்றோரை இழந்தவர்கள், வீடுகளில் தங்கிப் பயில இயலாதவர்களுக்கு உண்டு உறைவிடப் பள்ளிகளை நடத்தி வருகிறோம்.**

**மாணவர்கள் தவறாது பள்ளிக்கு வந்து செல்வதை உறுதிப்படுத்தவும் ஊக்குவிக்கவும் இலவச மிதிவண்டி மற்றும் இலவச பேருந்துப் பயண பாஸ் வழங்கும் திட்டங்களும் தமிழகத்தில் கடந்த 40 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளன. 100 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் மதிய உணவுத் திட்டத்தைத் திராவிட இயக்கம் கொண்டுவந்துவிட்டது. நாடு சுதந்திரமடைந்த பின், தமிழ்நாட்டின் எல்லா அரசுப் பள்ளிகளிலும் மதிய உணவுத் திட்டத்தை கர்மவீரர் காமராஜர் நடைமுறைப்படுத்தினார். இதுவே பின்னர் சத்துணவுத் திட்டமாகியது. அதில் முட்டை அல்லது வாழைப்பழம் சேர்த்துக்**



**கொடுத்து, மாணவர்கள் சோர்வின்றி ஊக்கத்தோடு கல்வி கற்பதைச் சாத்தியப்படுத்தினார், முத்தமிழறிஞர் கலைஞர்.**

**இப்போது எங்கள் முதல்வர் ஸ்டாலின் அவர்கள், ‘’முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை” அறிமுகம் செய்திருக்கிறார். இதன் மூலம் வறுமை, பள்ளிக்குச் சீக்கிரமாகக் கிளம்புதல் போன்ற காரணங்களால் காலை உணவு சாப்பிட இயலாத, முடியாத குழந்தைகளின் பசி தீர்க்கப்படுகிறது. இத்திட்டம் மூலம் ஊட்டச்சத்து குறைபாடு அபாயம் குறைக்கப்பட்டு, மாணாக்கர்களின் ஆரோக்கியம், கற்றல் திறன் அதிகரித்திருக்கிறது. மேலும், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தால் அரசுப் பள்ளியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்திருக்கிறது என்பதும் ‘தி இந்து’** (The Hindu) **உள்ளிட்ட நாளிதழ்கள் நடத்திய ஆய்வுகளின் மூலம் நிரூபணமாகியிருக்கிறது.**

**இது மட்டுமின்றி, ட்ராப் அவுட்** (Drop out) **எனப்படும் இடைநிற்றலைத் தடுப்பதற்கு தமிழக முதல்வர் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். தமிழ்நாட்டில் 8-ஆம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி வழங்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, 8-ஆம் வகுப்பு முடித்த அத்தனை மாணவர்களும் அடுத்தடுத்த ஆண்டுகள் தொடர்ந்து பள்ளிக்கு வருகிறார்களா என்பதைத் தீவிரமாகக் கண்காணிக்கிறோம். இடைநின்ற மாணவர்களையும் அவர்களது பெற்றோரையும் அதிகாரிகள் மூலம் நேரில் சந்தித்து, குறைகளை நிவர்த்தி செய்து, அம்மாணவர்களைத் தொடர்ந்து படிக்க வைக்கிறோம். இப்போது வடமாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டுக்கு வேலை தேடி புலம் பெயரும் தொழிலாளர்களின் குழந்தைகள் மட்டுமே இடைநிற்றலைச் சந்திக்கின்றன. அவர்களையும் இடைநிற்றல் இன்றிப் படிக்க வைக்கும் முயற்சிகளை எடுத்துவருகிறோம். தமிழகத்தில் கற்றல் இடைநிற்றல் அளவைப் பூஜ்ஜியம் ஆக்குவதே எங்கள் முதல்வரின் இலக்கு.**

**கிராமப்புற பள்ளிகளிலும் அறிதிறன் வகுப்பறைகள்** (Smart Class) **வந்துவிட்டன. அரசுப் பள்ளிகளில் படித்து முடித்து, மேல்படிப்புக்குச் செல்லும் மாணவிகளுக்குப் ‘’புதுமைப்பெண்” திட்டமும்; மாணவர்களுக்குத் ‘’தமிழ்ப் புதல்வன்” திட்டமும் பெரும் பேறாக அமைந்துள்ளன. அதோடு, கல்லூரி மாணவ-மாணவியரின் தனித்திறன் மேம்பாட்டுக்கு ‘’நான் முதல்வன்” திட்டம் கைகொடுக்கிறது. கொரோனா லாக்-டவுன் காலத்தில் மாணவர்களின் நலனை முன்னிறுத்தி அறிமுகம் செய்யப்பட்ட ‘’இல்லம் தேடி கல்வித் திட்டம்” மேலும் விரிவுபடுத்தப்பட்டு, அதன் மூலம் கற்றல் திறன் குறைவான மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம். அதோடு, நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களை ஒன்றிணைக்கும் திட்டம், குழு உரையாடல்கள் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களின் வழியாகச் சிறப்பாகச் செயல்படும் மாணவர்களைக் கண்டறிந்து, அவர்களை வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்கிறோம்.**

**மாணவர்களது விளையாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கு தமிழகத்தின் துணை முதல்வரும் எங்கள் இளம் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் ஏராளமான திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறார். பள்ளிகளுக்கு இடையில் மாவட்டம், மாநில அளவில் போட்டிகள் நடத்தி, அவற்றில் வெல்பவர்களுக்கு ‘’முதலமைச்சர் கோப்பை” வழங்குகிறார். அதோடு, அனைத்துப் பிரிவிலும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி மாணவர்கள் மட்டுமின்றி, ஆசிரியர்களையும் ஊக்கப்படுத்தி வருகிறார்.**

**எங்கள் முதல்வர் மாணவர்களிடம் உரையாற்றுகையில், ‘’கல்வியை மட்டுமே உங்களிடமிருந்து யாராலும் பிரிக்க முடியாது, உங்கள் கல்விக்கு எல்லா வகையிலும் அரசு துணை நிற்கும் என்று வழிகாட்டி வருகிறார்”** என்று நான் கூறியதும் அனைவரும் கைதட்டிப் பாராட்டு தெரிவித்தனர்.

மாணவர்கள் அலைபேசிக்கு அடிமையாகும் அவலம் குறித்து ஆலோசனை நடந்தது. அப்போது நான், ‘’எங்கள் முதல்வர் தளபதி செல்போனுக்கு மாற்றாக புத்தகங்களைக் கொண்டு வருகிறார். எங்கள் முதல்வரைச் சந்திப்பதற்கு மலர் மாலை, இனிப்பு, விலை உயர்ந்த பரிசுகளுக்கு புத்தகங்களை மட்டுமே பெற்று வருகிறார். அந்தப் புத்தகங்களை பள்ளிகளுக்கும், மாணவர்களுக்கும், நூலகங்களுக்கும் தொடர்ந்து வழங்கி வருகிறார். மாணவர்கள் கைகளுக்குப் புத்தகம் போய்ச் சேரவேண்டும், அவர்களின் வாசிப்புத் திறன் அதிகரிக்க வேண்டும், அதன் மூலம் மட்டுமே அலைபேசி அடிமைத்தனத்தைக் குறைக்க முடியும் என்று திட்டமிட்டுச் செயல்படுகிறார்’’ என்றதும் அனைத்து மாணவர்களும் அசந்தே போனார்கள்.

**எம்.ஐ.டி. வளாகத்தில் சட்டமேதை அம்பேத்கர், மௌலானா அபுல்கலாம் ஆசாத் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோருக்குச் சிலைகள் இருக்கின்றன. ‘’இந்தத் தலைவர்கள் வரிசையில் மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சிலை அமைப்பது சமூக நீதிக்கு அங்கீகாரம் கொடுப்பதாக இருக்கும்” என்று எம்.ஐ.டி. நிர்வாகியிடம் நான் கோரிக்கை வைத்துள்ளேன். மேலும், அரசியல் விஞ்ஞானம்** (Political Science) **பயிலும் எம்.ஐ.டி. மாணவர்கள் தமிழகத்தில் கல்விச் சுற்றுலா மேற்கொண்டு, திராவிட மாடல் அரசின் சாதனைகளை நேரில் ஆய்வு செய்வதற்கும் அழைப்பு விடுத்திருக்கிறேன்.**

இந்த இரண்டு நாள் கருத்தரங்கம் மூலம் மாணவர்களிடமும், பிற மாநில மாற்றுக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிடமும் திராவிட மாடல் ஆட்சியின் சமூகநீதி சாதனைத் திட்டங்களைக் கொண்டு சேர்த்ததில் எனக்கு மிகப்பெரும் மகிழ்ச்சி. இந்த வாய்ப்பை நல்கிய நம் கழகத் தலைவருக்கும், தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள். நம் திட்டங்களுக்குக் கிடைத்த பாராட்டுகள் எல்லாமே நமது கழகத் தலைவரும், சமூக நீதிக் காவலருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சிக்குக் கிடைத்த நற்சான்றிதழ் என்பதில் பெருமிதம் கொள்வோம்!

---

கருத்துரிமை பறிப்பு!

## பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்!

*சென்னை, பிப்.19-*

விகடன் இணைய தளம் முடக்கப்பட்டது, கருத்துரிமை பறிப்பு என்று சென்னை பத்திரிகையாளர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் வி.மணிமாறன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

இந்தியர்களை கை கால்களில் விலங்கிட்டு அமெரிக்க அரசு நாடு கடத்திய விவகாரத்தில், அமெரிக்காவின் அவமதிப்பை சகித்துக் கொண்ட ஒன்றிய அரசை விமர்சித்து விகடன் கார்ட்டூன் வெளியிட்டது.

இதற்கு பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோர் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், விகடன் இணைய தளம் முடக்கப்பட்டுள்ளது.

கருத்து சுதந்திரத்தைப் பறிக்கும் இந்த நடவடிக்கையை சென்னைப் பத்திரிகையாளர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது. இதுபோன்ற நடவடிக்கைகளை ஒன்றிய அரசு கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; கும்பமேளா பக்தர்கள் 18 பேர், டெல்லி ரயில் நிலையக் கூட்ட நெரிசலில் சிக்கி பலியாகி விட்டார்களே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; கும்பமேளா தொடர்பாக இது இரண்டாவது பலித் தொகுப்பு. இது ரயில் நிலைய அதிகாரிகளின் குளறுபடியினால் நேர்ந்த சோகம் !**

**ஏற்கனவே கடந்த மாதம் 29 அன்று கும்பமேளா நடந்த பிரயாக்ராஜில் 30 பேர் பலியானார்கள். இது முதல் பலித் தொகுப்பு! உத்தரப் பிரதேச பா.ஜ.க. அரசின் நிர்வாகக் குளறுபடிகளினால் நேர்ந்த சோகம் !**

**கும்பமேளா என்பது ‘துன்ப மேளாவாக - சோக மேளாவாக’ முடிந்து விட்டதே என்று தேசமே கவலையில் தேம்புகிறது !**

**144 ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கும் கும்பமேளாவாம் இது. இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 144 - ஆவது பிரிவு, மனித உயிருக்கும், நல்வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும் கேடு விளையும் என்றால் அந்தத் தடைச் சட்டப் பிரிவைப் பயன்படுத்தலாம் என்று வரையறுக்கப்பட்டிருப்பதோடு, இந்த 144 ஆண்டுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சோகம் இன்னும் ஆழமாகத் துளைக்கிறதே !**

---

தமிழகத்திற்கு கல்வி நிதி வழங்க முடியாது என ஒன்றிய அரசு ‘பிளாக் மெயில்’

# உரிமைக் காக்க ஒன்றிணைந்து குரல் கொடுப்போம் !

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

*சென்னை, பிப். 19-*

தமிழகத்திற்கு நியாயமாக வழங்க வேண்டிய கல்வி நிதியை வழங்காமல் ஒன்றிய அரசு ‘பிளாக் மெயில்’ செய்து வருகிறது. மாநில உரிமையைக் காக்க ஒன்றிணைந்து குரல் கொடுப்போம் என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து 17.2.2025 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-



தினகரன்

பிப்ரவரி 17, 2025 திங்கட்கிழமை

தமிழகம் அடிபணியாது

தமிழக மக்கள் மத்தியில் எப்படியாவது இந்தியை திணித்து விடுவது என்ற முடிவோடு ஒன்றிய அரசு கடந்த 10 ஆண்டுகளாகவே செயல்பட்டு வருகிறது. பிரதமர் மோடி தலைமையிலான பாஜ அரசு பொறுப்பேற்ற நாளில் இருந்தே இந்தி மொழியை எப்படியாவது தேசிய மொழியாக மாற்றிட வேண்டும் என்கிற முனைப்போடு செயல்பட்டு வருகின்றனர். சில மாநிலங்கள் அதற்கு செவிசாய்த்தும் விட்டன. தமிழ்நாடு, மேற்கு வங்கம் உள்ளிட்ட சில மாநிலங்கள் மட்டுமே இன்னமும் துடிப்போடு, ஒன்றிய அரசிடம், மாநில சுயாட்சிக்காக மல்லுக்கட்டி வருகின்றன. இப்போது ஒன்றிய அரசு சமக்ர சிக்சா அபியான் திட்டத்தில் தமிழகத்திற்கு கொடுக்க வேண்டிய நிதியை நிறுத்தி, தமிழகத்தில் இந்தியை திணிக்க முற்படுகிறது. இத்திட்டத்தில் தமிழகத்திற்கு வரவேண்டிய ₹2 ஆயிரத்து 152 கோடி நிதி இதுநாள் வரை வழங்கப்படவில்லை.

மக்கள் மத்தியில் எப்படியாவது இந்தியை திணித்து விடுவது என்ற முடிவோடு ஒன்றிய அரசு கடந்த 10 ஆண்டுகளாகவே செயல்பட்டு வருகிறது. பிரதமர் மோடி தலைமையிலான பாஜ அரசு பொறுப்பேற்ற நாளில் இருந்தே இந்தி மொழியை எப்படியாவது தேசிய மொழியாக மாற்றிட வேண்டும் என்கிற முனைப்போடு செயல்பட்டு வருகின்றனர். சில மாநிலங்கள் அதற்கு செவி சாய்த்தும் விட்டன. தமிழ்நாடு, மேற்கு வங்கம் உள்ளிட்ட சில மாநிலங்கள் மட்டுமே இன்னமும் துடிப்போடு, ஒன்றிய அரசிடம், மாநில சுயாட்சிக்காக மல்லுக்கட்டி வருகின்றன.

இப்போது ஒன்றிய அரசு சமக்ர சிக்சா அபியான் திட்டத்தில் தமிழகத்திற்கு கொடுக்க வேண்டிய நிதியை நிறுத்தி, தமிழகத்தில் இந்தியை திணிக்க முற்படுகிறது. இத்திட்டத்தில் தமிழகத்திற்கு வரவேண்டிய ரூ.2 ஆயிரத்து 152 கோடி நிதி இதுநாள் வரை வழங்கப்படவில்லை. தேசிய கல்வி கொள்கையின்படி இந்தியாவில் உள்ள மாநிலங்கள் தாய் மொழி, ஆங்கிலம் மற்றும் 3வது மொழியாக இந்தியை ஏற்றுக் கொண்டுள்ள சூழலில், தமிழ்நாடு மட்டுமே இதனை ஏன் ஏற்க மறுக்கிறது என ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கேள்வி எழுப்பியுள்ளார்.

3வது மொழியை ஏற்கும் வரையில் தமிழகத்திற்கு நிதி வழங்க முடியாது என ‘பிளாக்மெயில்’ பாணியில் ஒன்றிய அமைச்சர் பேசியிருப்பது பலரது கண்டனத்தையும் பெற்றுள்ளது. தமிழகத்தின் இந்தி எதிர்ப்பு வரலாறு, ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு தெரிய வாய்ப்பில்லை. 1937ம் ஆண்டு தொடங்கி மதராஸ் மாகாணத்தில் இந்தியை விதைக்க முயன்ற போது, இங்கு ஏற்பட்ட மாணவர்கள் எழுச்சியும், சிறை நிரப்பும் போராட்டங்களும் வரலாற்றில் இன்றும் இடம் பெற்றுள்ளன.

பிரிட்டிஷ் அரசாங்கமே தமிழகத்தில் இந்தி கட்டாயம் என்ற உத்தரவை வாபஸ் பெற்றுக் கொண்டது. 1965ம் ஆண்டில் இந்தி திணிப்புக்கு எதிராக திமுக களம் இறங்கியபோது, அதனோடு கைகோர்த்து மாணவர்களும், இளைஞர்களும் திரண்டனர். இறுதியில் தமிழகம் ஆட்சி மாற்றத்தையே எதிர்கொண்டது. 1986ம் ஆண்டில் கூட ஒன்றிய அரசின் அலுவலகங்களுக்கு கடிதங்கள் அனைத்தும் இந்தியில் வரும், இந்தியா முழுவதும் நவோதயா பள்ளிகள் திறக்கப்படும் உள்ளிட்ட உத்தரவுகளை களத்தில் நின்று போராடியே தடுத்து நிறுத்திய பெருமை தமிழ் மக்களுக்குண்டு.

இப்போது மீண்டும் ஒன்றிய கல்வி அமைச்சர் மும்மொழி கொள்கை என்ற பெயரில் முருங்கை மரம் ஏற தொடங்கியுள்ளார். இத்தகைய பிளாக்மெயிலுக்கெல்லாம் தமிழகம் அடிபணியாது என கூறியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், ‘உங்கள் தனிச்சொத்தை கேட்பது போல் திமிராக பேசினால், தமிழர்களின் தனிக்குணத்தை டெல்லி பார்க்க வேண்டியது வரும்’ என எச்சரித்துள்ளார். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் எந்தவொரு பிரிவிலும் மும்மொழி கொள்கை இடம் பெறாதபோது, ஒன்றிய அரசு தான் முடித்த முயலுக்கு 3 கால்கள் எனக் கூறி மும்மொழியை திணிக்க அடம் பிடிக்கிறது.

இந்திய ஒன்றியம் என்பது மாநிலங்களால் ஆனது என்பதை ஒன்றிய அரசும், அதன் ஆட்சியாளர்களும் அடிக்கடி மறந்து விடுகின்றனர். இந்தியை எதிர்க்க தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டிய நேரத்தில், அதிமுக வழக்கம் போல் அடக்கியே வாசிப்பதும் பொதுமக்கள் மத்தியில் விவாத பொருளாக மாறி வருகிறது. மாநிலத்தின் உரிமையை காக்க அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டிய நேரமிது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



கோவை மாவட்டம் நீலகிரி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட அன்னூர் பகுதியில் பல்வேறு இடங்களில் முடிவுற்ற பணிகளை ஆ .ராசா எம்.பி., தொடங்கி வைத்தும் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சிகளில் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார், அன்னூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி, தெற்கு ஒன்றிய செயலாளர் தனபால், அன்னூர் பேரூராட்சி தலைவர் பரமேஸ்வரன், மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர் அம்பாள் நந்தகுமார், அன்னூர் ஆனந்தன், தென்னை சிவா மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட கட்சியின் முக்கிய நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.